# பெரும்பாணாற்றுப்படை காட்டும் நிலவியல் பண்பாடு

***மு. கார்த்திக்ராஜா***
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ் உயராய்வுத்துறை
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவில்பட்டி

***நெறியாளர் முனைவர் கோ. சந்தனமாரியம்மாள்***
இணைப்பேராசிரியர் (ம) துறைத்தலைவர், தமிழ் உயராய்வுத்துறை
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவில்பட்டி
https://doi.org/10.5281/zenodo.14383154

**ஆய்வுச்சுருக்கம்**
*சங்க கால மக்களின் வாழ்வியல் சிந்தனைகளையும் அழகுற எடுத்தியம்பும் ஆற்றுப்படை நூல்களில் ஒன்றாக பெரும்பாணாற்றுப்படை திகழ்கிறது. கடியலூர் உருத்திரங்கண்ணனார் அவர்களால் பாடப்பட்ட இந்நூலானது 500 அடிகளைக் கொண்டதாக விளங்கிறது. ஐந்நிலங்களில் வாழும் மக்களின் இயல்பு இந்நூலில்நன்குபடம்பிடித்துக்காட்டப்படுகிறதுஎனவேபெரும்பாணாற்றுப்படை வாயிலாக பண்டைய மக்களின் நிலவியல் பண்பாட்டை கட்டுரையாளர் எடுத்துக் கூறியுள்ளார்.*

## முன்னுரை

*பழந்தமிழரின் அரிய பண்பு நலனையும் சமூக வரலாற்றையும் காட்டும் காலப்பெட்டகமாக சங்க இலக்கியம் திகழ்கிறது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்நிலங்களில் வாழும் மக்களின் வாழ்வியல் இந்நூலில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. யாழின் இயல்பு, வறுமைத்துன்பம், மக்களின் விருந்தோம்பல் பண்பு ஆகியவற்றை ஆசிரியர் திறம்பட பாடியுள்ளார். அவற்றுள் ஐந்திணைகளின் வாயிலாக பண்டைய மக்களின் நிலவியல் பண்பாட்டை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

## நிலவியல் பண்பாடு

*சங்க காலத் தமிழகம் நிலவியல் கூறுகளின் அடிப்படையில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகை நிலமாக பிரிக்கப்பட்டுள்ளது. ஒரு நாட்டின் இயற்கை வளமே அந்நாட்டின் சமூக வளர்ச்சிக்கு மூலகாரணமாகத் திகழ்கிறது. அதனால் தான் பண்டைய மக்கள் நிலத்தினை முதற்பொருளாக வைத்துள்ளன.*

***"நிலமும் பொழுதும் என முதல் இருவகைத்தே"*** [1]

*மக்களின் வாழ்வியலானது அவரவர்கள் சார்ந்த நிலங்களை சார்ந்தே அமைகிறது.*

***"மாயோன் மேய காடுறை உலகமும்***
***சேயோன் மேய மைவரை உலகமும்"*** [2]

*தொல்காப்பியரும் தெய்வம் முதலான கருப்பொருள்கள் அனைத்தும் அந்தந்த நிலத்தினையே சார்ந்து இயங்குகிறது என்பதை இதன் மூலம் தெரிய வருகிறது.*

## பாலை நிலம்

*அணிலும் எலியும் திரியாதபடி முள் போன்ற ஈந்தில் இலையால் வேயப்பட்டிருக்கிறது. மேலும் முள்ளம்பன்றியின் முட்களைபோல் உள்ள புல்லினால் எயிற்றியர் குடிசை வேயப்பட்டுள்ளது.*

***"நீள்அரை இலவத்து அலங்குசினை பயந்த***
***புனைஅம் பசுங்காய் புடைவிரிந்தன்ன***
***வேற்றலை அன்ன வைந்நுதி நெடுந்தகர்***
***ஈத்துஇலை வேய்ந்த எய்ப்புறம் குரம்பை"*** [3]

*எறும்புகள் தங்களின் புற்றுகளில் சேர்த்து வைத்திருக்கும் புல்லரிசியை வாரிக்கொண்டு வந்து உண்ணல் எயிற்றியர் வழக்கத்தினையும் பாலை நிலங்களில் கிடைக்கும் உணவினையும் கூறுகிறது.*

**குறிஞ்சி நிலம்**

*யானை தன்னைத் தாக்க வந்தாலும், தன்மேலே பாம்பு ஊர்ந்து சென்றாலும் இடி இடித்தாலும் கருவுற்ற மகளிர் கூட இதற்கெல்லாம் அஞ்சாத மறத்தன்மை மிக்க வாழ்க்கையினை வாழ்பவர்கள் குறிஞ்சிமக்கள்.*

***"யானை தாக்கினும் அரவுமேல் செலினும்***
***நீல்நிற விசும்பின் வல்ஏறு சிலைப்பினும்"***[4]

*மேலும் குறிஞ்சி வீரர்கள் தங்களின் பகைவருடைய ஆநிரைகளை கவர்ந்து கொண்டு வந்து தங்கள் குடித்த கள்விலைக்கு கடனாக தீர்ப்பர் என குறிஞ்சி நில மக்களின் வாழ்வினை கூறுகிறது.*

**முல்லைநிலம்**

*ஆடுகள் நின்று தின்னும் தழைகளை குடிலின் மேல் கட்டும் வழக்கத்தினையும் மேலும் வரகு கற்றையால் வேடப்பட்ட தோற்பாயலை விரித்து அதன் மேல்தூங்குகின்ற இடையன். அவன் வீட்டு முற்றத்தில் செம்மறி ஆடுகளும், வெள்ளாடுகளும் கயிற்றினால் கட்டப்பட்டு கிடக்குகிறது. ஆயர்மகளிரும், தான்விற்ற நெய் விலைக்கு நல்ல பசுக்களையும் கன்றுகளையும் வாங்கின்ற மாண்பினையும், நிலத்தின் மூலம் கிடைக்கும் வளங்களை எடுத்துக்கூறுகிறது.*

***"மறிய***
***குளகுஅரை யாத்த குறுங்கால் குரம்பை***
***நெய்விலைக்கட்டில் பசும்பொன் கொள்ளான்***
***எருமை நல்ஆன கருநாகு பெறூஉம்"***[5]

**மருதநிலம்**

*நண்டின் வளைகள் சிதையும்படியும் வயலின் அந்தச் சேற்றை சமம்பட மிதித்த உழவர்கள் முடிநாற்றை நடுகின்றனர். அங்குள்ள உழவருடைய பிள்ளைகள் நாற்றுநட்ட வயலின் கண்களை பறிக்கின்ற வயலோடு இயைந்த வாழ்வினை றேம்கொள்கின்றனர்.*

***"மென்தோல்***
***மிதிஉலைக் கொல்லன் முடிடுகாடிற்றன்ன***
***கவைத்தாள் அலவன் அளற்று அளை சிதைய"***[6]
***"கள்கமழ் புதுப்பு முளையின் முட்சினை***
***முகைசூழ் தகட்ட பிறழ்வாய் முள்ளிக்"***[7]

**நெய்தல் நிலம்**

*மூங்கிலாகிய தூண்டிற்கோல் நடுங்கும்படி மீனை தப்பாமல் பிடிக்கு வழக்கினை உடைய பாணன் மீனைப் பிடிப்பதற்காக பச்சிறைச்சி இட்ட பசிய தோற்பையை தோளிலே தொங்க விட்டும் செல்லும் வழக்கினை உடையவனாகவும், அக்காலத்தில் பாணர்கள் மீன்பிடிக்கும் வழக்கமும் உடையவர்கள் என்பதை அறியமுடிகிறது.*

***"பச்சூன் பெய்த சுவல்பிணி பைந்தோல்***
***கோள்வல், பாண்மகள் தலைவாத்துயாத்த***
***நெடுங்கழைத் தூண்டில் நடுங்க நாண்***
***கொளீ."***[8]

*எனவே நெய்தல் நிலமானது கடல் சார்ந்த நிலமாகவும், அங்குள்ள மனிதர்கள் அந்த நிலத்தோடு சார்ந்த கடலினையே நம்பியிருக்கின்றன என்பதை உணரமுடிகிறது*

**முடிவுரை**

*சங்க இலக்கியமானது வாழ்வியல் உண்மைகளை உலகறியச் செய்யும் பெரும் பணியை மேற்கொண்டு வருகின்றன. பெரும்பாணாற்றுப்படை முலம் ஐந்திணை மக்களின் வாழ்வியலில் நிலம் முக்கிய பங்கு வகிக்கிறது. அனைத்து உயிர்களும் அந்தந்த நிலத்தின் வளங்களுக்கும் ஏற்றப்படி தங்களின் வாழ்வினை நடத்தியுள்ளனர் என்பதை உணரமுடிகிறது. நிலம் அனைத்து உயிர்களையும் வாழ்வளிக்கும் அறிய பெட்டகம் என்பது ஐயமில்லை.*

**சான்றெண்விளக்கம்**


1. முனைவர் ச.திருஞானசம்பந்ம் (உ.ஆ) அகப்பொருள் விளக்கம் ப-14
2. முனைவர் ச.திருஞானசம்பந்தம் (உ.ஆ) தொல்காப்பியம் பொருளதிகாரம் ப-10
3. முனைவர் இரா.மோகன் (உ.ஆ) மற்றும் பிறர் சங்க இலக்கியம் பத்துப்பாட்டு ப-207
4. மேலது ப-209
5. மேலது ப-210
6. மேலது ப-212
7. மேலது ப-215

**பார்வை நூல்கள்**

1. *முனைவர் ச.திருஞானசம்பந்தம் (உ ஆ) அகப்பொருள் விளக்கம் கதிர்பதிப்பகம் திருவையாறு முதற்பதிப்பு நவம்பர் 2010*
2. *முனைவர் ச.திருஞானசம்பந்தம் (உ ஆ) முதற்பதிப்பு நவம்பர் 2010 கதிர் பதிப்பகம், திருவையாறு*
3. *முனைவர் ச.திருஞானசம்பந்தம் (உ ஆ) தொல்காப்பியம் - பொருளதிகாரம் கதிர் பதிப்பகம், திருவையாறு*
4. *முனைவர் இரா.மோகன் (உ ஆ) மற்றும் பிறர் சங்க இலக்கியம் பத்துப்பாட்டு (முதற்பகுதி) நியு.செஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட் சென்னை-98 முதற்பதிப்பு - ஏப்ரல் 2024*